# நவம்பர் மாதத்தில் பணவீக்கம் அதிகரிப்பு

முதன்மைப் பணவீக்கம் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அதனை வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிலிருந்தும் மாற்றமடைந்து 2018 ஒக்டோபர் மாதத்தில் காணப்பட்ட 0.1 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளது. 2018 நவமபர் மாத்தில் ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கத்தில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டமைக்கு உணவு விடயங்களின் விலைகளில் காணப்பட்ட




அதிகரிப்பு முக்கிய தூண்டுதலாக அமைந்தது.

ஆண்டிற்கு ஆண்டு உணவுப் பணவீக்கம் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் -6.6 சதவீதத்திலிருந்து 2018 நவம்பர் மாதத்தில் -3.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், ஆண்டிற்கு ஆண்டு உணவல்லாப் பணவீக்கம் 2018 ஒக்டோபரில் 5.8 சதவீதத்திலிருந்து 2018 நவம்பர் மாதத்தில் 5.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டுச் சராசரி அடிப்படையொன்றில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றம் 2018 ஒக்டோபர் மாதத்தில் 3.3 சதவீதத்திலிருந்து 2018 நவம்பரில் 2.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றமானது உணவு வகையில் குறிப்பாக, காய்கறிகள், பச்சை மிளகாய், அரிசி, எலுமிச்சம்பழம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய விடயங்களின் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக 2018 நவம்பரில் 2.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, உணவல்லா வகையிலுள்ள விடயங்களின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தவிடத்து சுகாதாரத் துணை வகை உயர்ந்த அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. எனினும், போக்குவரத்து துணைத் துறையிலுள்ள விடயங்களின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கமானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2018 ஒக்டோபாரில் 3.4 சதவீதத்திலிருந்து 2018 நவம்பரில் 3.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2018 நவம்பரில் 2.4 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.